(ஊ) தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்